**தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது

தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசின் தாபன கோவையின் 19 ஆவது பந்தியின் 5.3 ஆம் பிரிவு | உப பதிவிற்குட்பட்ட வீட்டை பெற்றுக் கொள்வதற்கு உரிமம் ஒன்றுள்ள இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அவர்கள் குடியிருந்த தினத்தில் இருந்து அரச விடுதி வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஏனைய பல்கலைக்கழகங்கள் பின்பற்றுகின்ற ஒழுங்கின் பிரகாரம் பதிவாளர் மற்றும் உபவேந்தர் ஆகிய பதவிகளுக்காக அரச விடுதிக்காக வாடகை செலுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்யப்பட்ட தினத்தில் இருந்து 02 வருடங்கள், கடந்திருந்த கூட்டுமொத்தம் ரூபா 648,703 ஆன பிடிப்பணம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டிலே வருமானத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்காக பொருட்கள் மெய்மையாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அடிக்கடி இடம்பெற்ற உக்கிரமான கொவிட் தொற்று நிலைமையின் காரணமாக பொருட்கள் மெய்மையாய்வு இடம்பெறவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,654,128 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,638,179 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,015,949 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஊழியர் கிரயம் ரூபா 9,016,520 வினால் அதிகரித்தல் பிரதான காரணமாயிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் இடம்பெற்ற பரீட்சைகளுக்கிடையில் 53 பரீட்சைகளுக்குரிய கற்கை நெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களுள் பரீட்சைக்காக தோற்றியுள்ள மாணவர்களின் சதவீதம் மற்றும் பரீட்சைக்காக தோற்றியுள்ள மாணவர்களில் பரீட்சையில் சித்தியடைந்த | மூப்பான மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவர்களின் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக முழுமையான அவதானத்தை கல்வி நடவடிக்கைகளுக்கு செலுத்த முடியாதுள்ளது. அதன் காரணமாக முதலாவது சந்தர்ப்பத்திலே பரீட்சைக்காக தோற்றுதல் | கற்கை நெறியை தொடர்கின்ற மாணவர்கள் பரீட்சைக்காக தோற்றுவதற்கு மேலும் ஊக்குவிக்கும் பரீட்சையில் சித்திபெறாமல் இருப்பதற்கான காரணத்தை தேடிப்பார்த்து |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் நூற்றுக்கு 17 இல் இருந்து நூற்றுக்கு 73 வரையிலாகும். மாணவர்கள் பரீட்சைக்காக தோற்றாமைக்கு காரணம் மற்றும் சித்தியடைந்த சதவீதத்தில் வீழ்ச்சி என்பவற்றுக்கான காரணத்தை தேடிப்பார்ப்பதற்கு முகாமைத்துவம் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மற்றும் முதல் சந்தர்ப்பத்திலே பரீட்சைகளில் சித்தியடைதல் என்பன இடம்பெற முடியாத சந்தர்ப்பங்களாக காணக் கூடியதாகவுள்ளது. | அதற்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அங்கீகாரங்களை பெற்றுக் கொள்வதற்காக 2010 மே 18 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்திலே பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பொறியியலாளர் மற்றும் பட்டக் கற்கை நெறிகளுக்காக இலங்கை பொறியியல் நிறுவனத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டியதாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பட்டக் கற்கைநெறிக்காக பாடங்கள் எதிர்பார்த்த மட்டத்தில் இல்லாததன் காரணமாக தரச் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாது போயிருந்தது. | இந்தப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பொறியியல் பட்டம் தொடர்பான அங்கீகாரத்தை இலங்கை பொறியியல் நிறுவனத்திடமிருந்து விண்ணப்பிக்கின்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமான வகையில் கற்கை நெறியின் பாடங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைபயன்பாடுடைய சொத்துக்கள், பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நீண்டகாலமாக பாவனைக்குட்படுத்தப்படாத 13 உருப்படிகளுக்குரிய ரூபா 7,844,357 பெறுமதியான 141 பொருட்களும், பெறுமதி அடையாளங் காணமுடியாத 17 உருப்படிகளுக்குரிய 102 பொருட்களும் கணக்காய்வுத் தினமான 2021 நவம்பர் 22 ஆந் திகதியிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | நீக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் கொவிட் தொற்று நிலைமையினால் மேற்கொள்ள முடியாது போனது. | உபயோகிக்க முடியுமான பொருட்களை உபயோகிப்பதற்கும் நீக்கப்பட வேண்டிய பொருட்களை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்ட அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மதிப்பிடப்பட்ட ரூபா 927.34 மில்லியன் கிரயத்தில் பல்கலைக்கழகத்திற்காக வேலைத்தளம், 600 மாணவர்களுக்கான விடுதியொன்று மற்றும் 300 இருக்கைகளுடனான சிற்றுண்டிச்சாலையொன்று நிர்மாணிப்பதற்கு 2017 சனவரி 03 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 281.36 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 22.5 மில்லியன் மாத்திரம் அறிவுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இங்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் தொடர்பாக பல்கலைக்கழகத்தினால் உரிய பிரிவுடன் அடிக்கடி கலந்துரையாடப்பட்டது. அவ்வாறே இந்நடவடிக்கை தாமதமாதல் தொடர்பாக பல்வேறு காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. அத்தோடு நிதியத்தை விநியோகிக்க முடியுமென்பதாகவும் இந்த பல்கலைக்கழகத்தினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதை துரிதப்படுத்துமாறு வேண்டி மீண்டும் கடிதமொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2021 ஆம் ஆண்டுக்காக பல்கலைக்கழக பெறுகைகள் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 29.6 மில்லியனில் கொள்வனவும் ரூபா 2.5 மில்லியன் புனர் நிர்மாணமும் மற்றும் ரூபா 0.3 மில்லியனில் ஊழியர் பயிற்றுவிப்பும் மீளாய்வாண்டிற்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | பல்கலைக்கழகத்தின் மூலதனச் சொத்துக்களுக்காக ரூபா 42.2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருநததுடன் பெறுகைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டளை, பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் நிலவுகின்ற தொற்று நிலைமையின் காரணமாக மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்குள்ள வசதியீனங்கள் மற்றும் கடன் கடிதத்தை (LC) வங்கியின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | பெறுகைத் திட்டம் நடைமுறைப்படுத்த ப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலே நூலக புத்தகங்களை கொள்வனவு செய்வதற்காக | 2021 யூலை 19 ஆந் திகதி மூலதனப் பொருட்களை கொள்வனவு செய்யும் விண்ணப்ப | பெறுகைகள் திட்டம் நடைமுறைப்படுத்த |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 02 மில்லியன் ஏற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பத்திரத்துடன் e-book கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவிய தொற்று நிலைமையின் தாக்கத்தினால் மற்றும் அரச செலவுகளை குறைத்துக் கொள்ளும் கொள்கையினால் e-book கொள்வனவு செய்யாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | ப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகப் பீட கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 14,506,548 தொகைக்கு 2016 செப்தெம்பர் 10 ஆந் திகதி தனிப்பட்ட ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டு 2019 செப்தெம்பர் 12 ஆந் திகதி ரூபா 2,901,285 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் 2019 நவம்பர் 22 ஆந் திகதியாகும் போது முடிவுறுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் உரிய வேலைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அரச பணம் 2 வருடங்களுக்கு அதிகமான காலம் வெளித்தரப்பினரிடம் கையிலிருந்துள்ளது. மேலும் இந்த ஒப்பந்தத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள செயலாற்றல் காப்புறுதியின் செல்லுபடியான காலம் 2021 யூன் 19 ஆந் திகதி முடிவடைந்திருப்பதுடன் அதை நீடிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த ஒப்பந்தம் 60 நாட்களுக்குள் மேற்கொள்வதற்கு இருந்த போதிலும் உரிய பீட கட்டிடத்தில் உள்ள கல்வி பதவியணியினருக்கு வேறு இடத்தை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக ஒப்பந்தக்காரருக்கு முழுமையான இடத்தையும் உரிய தினத்தில் பெற்றுக் கொடுப்பதற்கு முடியாது போனது. அவ்வாறே நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக பல்கலைக்கழகம் பல மாதங்களாக முழுமையாக மூடப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ள முற்பணத்தை அரசிற்கு அறவிட்டுக் கொள்வதற்கு மற்றும் புனர்நிர்மாண பணிகளை துரிதமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உள்ளடங்காத 02 பதவிகளுக்காக மூன்று உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்து கணக்காய்வு தினமான 2021 ஒக்டோபர் 30 ஆந் திகதி வரை ரூபா 11,612,706 தொகையொன்று கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப விடயப் பரப்பிற்குரிய பட்டக் கற்கை நெறிக்காக கல்வி மற்றும் தொழில்சார் அறிவை உடைய விரிவுரையாளர்களின் சேவை மிக அவசியமானதாக காணப்படுவதுடன் சேவை அவசியத்தை கருத்திற் கொண்டு வெற்றிடமாகவுள்ள விரிவுரையாளர் பதவிக்காக நிபுணத்துவமும் திறமையுமுள்ள நபர்களை ஆட்சேர்க்கும் வரை இந்த விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின் அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படுவது இடம்பெற வேண்டும். |